5. கவன ஈர்ப்பு

(அ) கோவை உக்கடம் பகுதியில் உள்ள துப்புரவுத் தொழிலாளர்களின் வீடுகளைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. இதுதான் பேரவை விதி 55--ல் வருவது. இதற்கு முன்னால் வர முடியாது. இதற்கு முன்னால் எழுப்பியது, இப்போது எடுக்க வேண்டிய பிரச்சினையை முன்னாலேயே திட்டமிட்டு ஏதோ ஒரு நோக்கத்தோடு செய்ததுதான் என்பதற்கு எடுத்துக்காட்டு.

இவர்கள் எல்லாம் கொடுத்தவர்கள். 7 நாட்களுக்குள் எடுக்க வேண்டுமென்று இருக்கிறது. 7 நாட்களுக்குள் என்னிடத்திலே 130 கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்குப் பதில் வந்திருக்கிறது. தினசரி 2, 2 தான் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். அந்த வகையில் தான் அதை எடுக்க முடியுமே தவிர இப்போதே ஜீரோ அவரிலேயே நான் பேசுவேன் என்று பிடிவாதம் செய்த காரணத்தால்தான் நடவடிக்கை எடுக்க வேண்டி வந்தது.

திரு. கே. செல்வராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை, உக்கடம் பகுதியில் உள்ள துப்புரவுத் தொழிலாளர்களின் வீடுகளைப் புதுப்பிக்க வேண்டியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 11.35

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கோவை உக்கடம் பகுதியில் உள்ள நகராட்சி துப்புரவுத் தொழிலாளர்களுக்காக ஸ்லாட்டர் வீடு திட்டத்தில் 1965-ல் தமிழ்நாடு

1994 ஏப்ரல் 27]

வீட்டுவசதி வாரியம் கட்டிய 246 குடியிருப்புகளில் கட்டிட அமைப்பிற்கு ஊறு விளைவிக்கும் பெரும் பழுதுகள் ஏதுமில்லை. இருப்பினும் சில 'சன்ஷேடுகள்', மாடிப்படி, பால்கனி கைப்பிடிச்சுவர், தளத்தின் கீழ்ப்பகுதி, குழாய்கள் முதலியவற்றில் சில பழுதுகள் ஏற்பட்டுள்ளன. இவற்றைப் பழுது பார்ப்பதற்காக ரூ.85,300-க்கு ஆட்சிமுறை ஒப்புதலளிக்க (administrative approval) *வாரியம் அரசைக் கோரியுள்ளது. அங்கீகாரம் கிடைத்தவுடன் பழுதுபார்ப்புகள் துரிதமாகச் செய்து முடிக்கப்படும். பராமரிப்பு இனத்தின்கீழ் ஒதுக்கப்படும் குறைந்தபட்ச நிதியில் மிக முக்கியமான பழுதுகள் ஆண்டுதோறும் சரிபார்க்கப்படுகின்றன.*

பாலையன் தோட்டம் குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 308 வரிசை வீடுகள் 1969-ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டன. சுமார் 30 வீடுகளில் ரூ. 1.32 இலட்சம் செலவில் சிறப்புப் பழுது பார்க்கும் பணிகள் 1992--93-ல் நடைபெற்றன. நடப்பு ஆண்டில் (1993-94) பராமரிப்புச் செலவினத்தின்கீழ் உடைந்த குழாய்களை மாற்றுதல், சாக்கடை அடைப்புகள் நீக்குதல் போன்ற பணிகள் நடைபெறுகின்றன.

லிங்கைய கவுண்டர் தோட்டம் குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1969-ல் 286 வரிசை வீடுகள் கட்டப்பட்டன. இக்கட்டிடங்கள் அதில் வசிப்பவர்களின் உயிருக்கோ, உடைமைகளுக்கோ அபாயம் விளைவிக்கும் நிலையில் இல்லை. இந்தக் கட்டிடங்களுக்கு 1992-93-ல் சிறப்புப் பழுது பார்க்கும் பணிகள் ரூ.1.12 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன. நடப்பாண்டில் உடைந்த குழாய்களை மாற்றுதல், சாக்கடை அடைப்பு நீக்குதல் ஆகிய பணிகள் நடைபெறுகின்றன.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கின்ற பதிலுரையில், உக்கடம் பகுதியில் வாழ்கின்ற அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களுடைய வீடுகள் ஒருசில இடங்களில் பழுதடைந்துள்ளன. அவற்றைப் பழுதுபார்ப்பதாகக் கூறினார்கள். நான் கேட்டுள்ள இந்தக் கேள்வியில் இருக்கின்ற நோக்கம், அந்தப் பகுதியில் வாழ்கின்ற துப்புரவுப் பணித் தொழிலாளர்கள், கோவை மாநகராட்சியினுடைய அரசுப் பணியில் இருக்கின்ற துப்புரவுத் தொழிலாளர்கள். இப்போது கோவை மாநகராட்சியில் இரண்டு பகுதிகளில் இதுபோல் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 288 வீடுகளை, மாடி வீடுகளாகக் கட்டிக்கொடுத்துள்ள இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்து, உக்கடம் பகுதியிலுள்ள இவர்களுக்கு, 20,30 ஆண்டுகளுக்கு முன்பாக, பழைய நகரசபையாக இருந்த போது கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளின் ஓடுகளெல்லாம் உடைந்து மிகவும் மோசமாக உள்ளன. மேலும் அந்தப் பகுதி மாநகராட்சியின் நுழைவுப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அங்கே வாழ்கின்ற அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாழ்வு அளிக்கின்ற விதத்தில் இந்த ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அந்த மாடி வீடுகளைக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக மாடி வீடுகள் கட்டிக் கொடுக்கிற திட்டம் எதுவும் தற்போது அரசின் செயற்குறிப்பிலே கிடையாது. ஆனால் அவர்கள் குடியிருக்கிற அந்த வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கான செயற்குறிப்புகள் இருக்கின்றன. எனவே, அந்த வீடுகள் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த வீடுகளைப் பழுதுபார்த்துக் கொடுப்பதாகக் கூறினார்கள். மிக்க நன்றி. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம், அடுத்த நிதியாண்டில் மானியக் கோரிக்கைகள் வருகின்றபோது கோவை மாநகர எல்லைப் பகுதியாக இருக்கிற காரணத்தால், துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தில் இந்தப் பகுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேர்த்துக் கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில், குடிசை மாற்று வாரியத்தினுடைய நிதிநிலைமையை அனுசரித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.